பதிவு எண்—M. 5720　　வெள்ளிக் கிழமையில்　　குருகுலத் தாள்

முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர்: இளவழகனார்.

5-கிளை　குருகுலம், மாம்பாக்கம்; விசய, வைகாசி, —6—53　தளிர்-36

குருகுலத்தின் குறிக்கோள்:

பொதுமறைவிளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

நாளும் விருந்து

இல்வாழ்க்கையின் நோக்கம் விருந்தோம்புதலே என்றும், விருந்தின்றித் தனித்து உண்ணலாகாது என்றும் கூறிய ஆசிரியர், இத்தக் குறளில் நாளும் விருந்தோம்புதல் கடமை என்று அறிவுறுத்துகின்றார் அப்படி இடையறாது விருந்தோம்புவதனால் வாழ்க்கை இடர்ப்படாது, கெடாது என்றும் துணிவு தருகின்றார்.

மெய்யன்போடு நாளும் விருந்தோம்புவார்க்கு, நண்பர் பலர் பெருகுவர்; பலர் உள்ளம் இயைந்து ஒற்றுமை கொள்ளும்; உணர்வு நயப்பட்டு நட்பமாக இயங்கும்; அதனால் மேலுமேலும் வருவாய்க்கும், செழிப்புக்கும் வளர்ச்சி உண்டாகுமே அல்லது தளர்ச்சி நேராது. இடர்களைப் பொறுக்கும் அமைதியும், அவைகளைக் கடக்கும் ஆற்றலும், அவற்றை இனிமையாய் மாற்றும் வன்மையும் மிகும். இடையறாத விருந்தோம்புதலால் இவையும் இடையறாது பெருகி வரும்.

நன்மைகள் செய்வோர்க்கு நலங்கள் உண்டாதலே இயைபுடையது, தீமைகள் உண்டாகும் என்பது பொருத்தமில்லாதது.

நற்பயன்கள் அமைதியாய் ஆழம் கொண்டு பரவிப் பயன் விளைத்தலால் அமைதியாக அவை நடப்பதுபோல் தெரிகின்றது. நற்பயன்கள் ஆழங்கொண்டு நிலைபெற வேண்டியது முதன்மையே! தீமைகள் அங்ஙனமல்ல, அவை விரைந்து தம் பயனை விளைத்து விட்டு உடனே நீங்கிவிட வேண்டியவை!

அதனாலேதான், தீமைப் பயன் விரைந்து உண்டாதலும் நன்மைப் பயன் மெதுவாக நிகழ்தலும் உலகியல்பாய் உள்ளன.

மேலும், நற்செயல்களைச் செய்யுங் காலத்தில் தீமைப் பயன் உண்டானால், அதற்குக் காரணம், அந் நற்செயல்களே என்று துணிவது தவறு. முன் செய்த தீச்செயல்களின் பயனே அது! இந் நற் செயல்களின் பயன் தகுதியாக வேர் கொண்டு நிலைத்துப் பின்னே பெருகி வரும்.

இந்த அடிப்படையை வைத்து நோக்கினால், 'வைகலும் விருந்தோம்புவான் வாழ்க்கை பாழ்படுதலின்று, வாழ்வு பெறுதல் உறுதி' என்பது தெளியப்படும்.

வருவிருந்து வைகலும்
　　ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று.

வருவிருந்து வைகலும் ஓம்புவான வாழ்க்கை — வருகின்ற விருந்தினரை நாளும் கவனித்துப் போற்றுகிறவரது வாழ்க்கை நலம், பருவந்து பாழ்படுதல் இன்று — நைந்து கெடுதல் இல்லை.

செழித்து உயரும் என்பது கருத்து! ஒவ்வொரு நாளும் விருந்தினரைக் காத்துச் செலவு செய்தால், இருக்கும் செல்வமும் தொலையுமே என்னும் கருத்துடையார்க்கு, வளரும் என்று இது துணிவு தேற்றியது.

வருவிருந்து என்பதற்கு, தம்மை நோக்கி வரும் விருந்து எனவும், மேலும் மேலும் வரு விருந்து எனவும் பொருள் விளக்கிக் கொள்ளலாம். வைகலும் என்பதில், அஃதொன்றையே கடமையாகக் கொண்டு செய்வார் என்னுங் குறிப்பும் எழுதல் உணரப்படும்.

பல தடைகளாலும், இடுக்கண்களாலும், இன்னல்களாலும் வருந்துதலும் தேய்ந்தொழிதலும் என்றதற்குப் 'பருவந்து பாழ்படுதல் இன்று' என்றார். வாழ்க்கை வரவர நட்பமாகிக் கிளைத்துச் செழிக்கும் என்றபடி!

"முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)
5-ம் ஆண்டுக் கையொப்பம்
(3-10-52 முதல்)

உள் நாடு	ரூ.	4	0	0
வெளி நாடு	ரூ.	6	0	0
தனித் தாள்		0	1	0
ஆயுள்—				
கையொப்பம்	ரூ.	100	0	0

விற்பனையாளர்கள், தேவைக்கு
முன்பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.

கிளை	விசய, வைகாசி,	தளிர்
5	5-6-53 வெள்ளி	36

ஆர். கே. எஸ். மறைவு

கோவை தந்த குண மணிகளுள் தலைமணியாய் நிலவித் தமிழர்க்குப் பெருமை சேர வாழ்ந்த அறிஞர் ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்கள் மறைந்த செய்தி ஐயகோ! எம்மைத் திடுக்கிடச் செய்தது.

தமிழர் தலைவர்களுள் கல்வியிலும், செல்வத்திலும், செல்வாக்கிலும், கடமை உணர்ச்சியிலும், செயல் திறமையிலும் ஒரு சேரச் சிறந்துயர்ந்தவர் நம் சண்முகனார்.

உலகப் புகழ் பெற்ற ஒரு சில தமிழர்களுள் கூடும [illegible] பணிகளைச் செய்வதில் ஊக்கமுடையவராய்த் தாய் மொழி உணர்ச்சியிற் சிறந்தவராய் இருந்தவர் ஆர். கே. எஸ்.

குறித்த நேரத்தில் குறித்தபடி செயலாற்றுவதிலும், குண நலம் சிறக்கக் கொள்கையில் மாறுபட்டோரிடத்திலும் கூடிப் பழகுவதிலும் அவர்கள் கருத்தாக இருந்திருக்கிறார்கள்.

வெள்ளையர் ஆட்சியிலும், உரிமை அரசிலும், அவர்கள் தாங்கிய பதவிகள் மிகவும் பொறுப்பு வாய்ந்தனவாய்த் தமிழர்க்கே பெருமை சேர்த்தன.

பொருளாதாரத் துறையில் பேரறிஞராகிய அவர்கள் அமெரிக்கா, ஐரோப்பா முதலிய அயல் நாடுகளுக்குச் சென்று பல பொருளாதார மாநாடுகளிலும் அரிய கருத்துக்களை உலகோர்க்கு உதவியிருக்கிறார்கள்.

உரிமை பெற்ற நேரத்தில் இந்திய அரசு எத்தனையோ சங்கடங்கட்குட்பட்டுக் கிடக்க, அந் நிலையில் அதன் நிதியமைச்சராக அமர்ந்து அதன் பொருளாதாரத்தைத் திடப்படுத்திய பெருமை சர். ஆர். கே. எஸ். அவர்களையே சாரும்.

தமிழ்த் துறையில் தக்க அறிஞர்களை மனமாரப் பாராட்டி, ஊக்க மூட்டி அவர்களின் நற்செயல்கட்கு உதவும் பெற்றிமையில் தமிழ் நாட்டு அரசியல் தலைவர்களுள் ஆர். கே. எஸ். அவர்கள் சிறந்தவர்களாக இருந்தார்கள்.

எம் ஆசிரியர் இளவழகனார் அவர்களை நன்கறிந்து போற்றி, அவர்கள் மேற் கொண்டுள்ள திருக்குறட் செயலகமாகிய மாம்பாக்கம் குருகுலப் பணி முறை பற்றி விரிவாக வினவிப் "புதிய வகையே; ஆயினும், நிறைவேறினால், உலகவர்களின் கருத்தையே ஈர்க்கும்" என்று ஊக்க மூட்டி, 'முல்லைக் கொடி'யின் வாழ் நாள் உறுப்பினராகத் தம்மைப் பதிவு செய்து கொண்ட திரு. செட்டியார் அவர்களால் நம் குருகுலத்துக்குப் பல நலங்கள் விளையும் என்று நம்பி யிருந்தோம்.

இனி, தமிழிசைத் துறை[illegible] அவர்கள் செய்த தொண்[illegible] எல்லாரும் அறிவர். ஆயினும், அதில் முதன்மையான பகுதி தேவாரப் பாடல்களின் பண்களை ஆய்ந்து அவற்றை இக்காலத்து வழங்கும் இராகங்களோடு ஒத்திட்டு, இன்ன பண் இன்ன இராகம் என்று கண்டு உறுதி செய்து, பழைய பெயர்களைப் புதுப்பித்து வழங்க வேண்டும் என்பதற்காக அவர்கள் செய்த ஏற்பாடுக[illegible] எண்ணி எண்ணி இன்புறத் தக்கன.

முத்தமிழில் இசைத் தமிழுக்காக இப்படிப் பல தமிழிசை வாணர்களைக் கூட்டி ஆராய்ச்சி செய்த நிகழ்ச்சி சங்க காலத்துக்குப் பிறகு தமிழ் நாட்டில் தமிழிசைச் சங்கச் சார்பில் செட்டியார் முன்னின்று செய்த நிகழ்ச்சி ஒன்றே எனலாம்.

இயற்றமிழ் வளர்ச்சிக்காக[illegible] நடைபெற்றிருக்கக்கூடிய ஒரு சில ஆராய்ச்சிகள் கூட இவர்கள் நடத்திய பண் ஆராய்ச்சி மகாநாட்டை ஒப்பப் பெரிய அளவில் சிறந்த முறையில் நடைபெற்றிருக்கமாட்டா.

எவ்வளவோ பெரிய பெரிய பதவிகளில் இருந்து பணியாற்றிய நம் சண்முகனார் இறுதி நாட்களில் தமிழ்த் தொண்டு

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

பணித் துறை

* இயக்கம் *

இப்போது நம் நாட்டில் பற்பல இயக்கங்கள் கால் கொண்டிருக்கின்றன. அவற்றுள் இத் தமிழ் நாட்டு மக்கள் எல்லாருடைய கவனத்தையும் ஆதரவாகவோ எதிர்ப்பாகவோ ஈர்த்திருக்கும் இயக்கம் ஈ. வே. ராவின் இயக்கம் தான் என்று சொன்னால் அதை யாரும் மறுக்க மாட்டார்கள். மறுக்கவும் முடியாது.

ஆனால் அவ்வியக்கம் பெற்றுள்ள ஆதரவு எவ்வளவு அல்லது கொண்டுள்ள எதிர்ப்பு எவ்வளவு என்று கணக்கிடுவது எளிதல்ல. ஆதரவு போலக் காணப்படுவ தெல்லாம் உள்ள படியே ஆதரவு என்றோ, எதிர்ப்பு போல் இருப்பதெல்லாம் முற்ற முடியச் சென்று வெற்றிகாணக் கூடிய எதிர்ப்பு என்றோ, எதிர்ப்பில்லாதது போன்ற நிலை உண்மை நிலை என்றோ சொல்வதற்கில்லை.

அவ்வியக்கம் மற்ற இயக்கங்களைப்போல் ஒரு துறையில் வேலை செய்வதாக இல்லாமல் அரசியல், சமூகம், சமயம், பொருளாதாரம் முதலிய பல துறைகளிலும் வேலை செய்து வருகிறது. சரியோ, தவறோ, தன் கொள்கைகளைச் சூறு வளியாகப் பரப்பி வருகிறது. பகுத்தறிவு இயக்கம் என்ற பெயரை அது பெற்றிருக்கிறது.

இதன் தலைவரான பெரியார் ஈ. வே. ரா. இந்நாட்டுத் தலைவர்கள் எல்லோராலும் அவர் தம் நேர்மை, உறுதி முதலிய நற்குணங்களுக்காக மதிக்கப் படுபவர். ஆனாலும் தம் போக்கினால் எவரோடும் இணைந்து நின்று செயலாற்ற முடியாத நிலையிலிருப்பவர்.

தாம் சரியென்று உணர்பவைகளைப் போற்றுவதிலோ அல்லாதவை என்று உணர்பவைகளைக் கண்டிப்பதிலோ, அவர் தன்னிகாற்றவர் என்றும் குறிப்பிடலாம். எந்த நேரத்தில் எந்த மாதிரி இயக்கத்தை அவர் தொடங்குவார், அதை எவ்வளவு தூரம் கொண்டு போய் எந்நிலையில் நிறுத்துவார் என்று எவராலும் கூறிவிட முடியாதபடி அவர் தம் இயக்கச் செயல்கள் இருக்கின்றன.

இனி அவர், தம் அளவில் கொள்கைகளை மிகவும் தெளிவான நிலையில் பின்பற்றுவதாக உறுதியாய் நினைத்தாலும், அத் தெளிவை எவ்வளவு விளக்கி எழுதிப் பேசி வந்தாலும் நம் நாட்டுப் பொது மக்களில் பெரும் பாலோர் அவரால் குழப்ப நிலையிலேயே வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

இனி, ஈ வே. ரா. அவர்கள் கதர், தீண்டாமைஒழிப்பு, ஜாதி ஒழிப்பு, கள் ஒழிப்பு, இந்தி ஒழிப்பு இந்தி போர்டு அழிப்பு வகுப்பு வாரி பிரதிநிதித்துவம், வட நாட்டார் எதிர்ப்பு எனப் பல இயக்கங்களைத் தொடங்கினார். இவையெல்லாம் வெற்றி பெற்றனவா? தோல்வி யுற்றனவா? எவ்வளவில் என்று வரையறுத்துச் சொல்வது கடினம். ஆனால் எல்லாம் அவ்வக் காலத்தில் மக்கள் எல்லாருடைய கவனத்தையும் ஈர்த்தது என்று மட்டும் திட்டமாகச் சொல்லலாம்.

எந்த ஒரு இயக்கமும் அதனிடத்து நற் கொள்கைகள் சிலவேனும் இல்லாமற் போனால் உருவாகாது. ஆனாலும் அதன் போக்கையும் செயல் முறைகளையும் பயன்களையும் பார்த்து அதனை மதிக்க வேண்டும். ஆதலின் திராவிடக்கழகம் உட்பட எந்த இயக்கத்தையும் பெயரைக் கேட்ட அளவானே வெறுக்கும் நிலையையோ, அல்லது அதுதான் இயக்கம், மற்றவையெல்லாம் இபக்கமாகா, ஆதலின் அதற்கு மாறான இயக்கத்தார் பேச்சுக் கூடக் கேட்கக் கூடாது என்று ஓங்கித்தட்டி ஒதுக்கும் போக்கையோ கொள்ளுதல் கூடவே கூடாது. இவைகளில் எதுவும் முடிந்ததாகவோ, இனித் தேவையில்லை என்ற நிலைக்கு வந்து நின்றிருப்பதாகவோ தெரியவில்லை. இந்நிலையில் இப் பழைய இயக்கங்களை யெல்லாம், அப்படி அப்படியே விட்டு விட்டு இவைகள் எல்லாவற்றைக் காட்டிலும் மக்கள் கவனத்தை ஈர்க்கக் கூடிய இயக்கம் ஒன்றைத் தொடங்கத் திட்டமிட்டார் போலும் ஈ. வே. ரா. அதுதான் சிலை உடைப்பு இயக்கம். இந்த மாதிரி தம் முதிர்ந்த வயதிலும் இயக்கத்துக்கு மேல் இயக்கமாக

எப்போதும், ஏதேனும் ஒரு சூறு வளிச் செயலில் ஈடுபட்டிருக்கும் ஈரோடையாரின் சிலையை எண்ணுகிறபோது எல்லாருடைய கவனத்தையும் ஈர்ப்பது ஒன்றுதான் அவர் நோக்கமா என்று கூட எண்ணத் தோன்றுகிறது.

சிலை உடைப்பு இயக்கம், மெய்யன்பர் சிலர் அச்சப்படுவது போல் இந்நாட்டுச் சமயத்துக்கே கேடு சூழும் என்று எனக்குத் தோற்றவில்லை. ஆனால் அது நாளடைவில் மேன்மையும், நீதியுமற்ற குறும்பர்களுக்குத் துணிவைக்கொடுத்து நாட்டில், குழப்பத்தை உண்டு பண்ணிவிடுமோ என்றுதான் எண்ணும்படி இருக்கிறது.

மக்கள் அமைதியில் மிக்க கருத்துச்செலுத்துபவரும்,பலாத்காரத்துக்குச் சிறிதும் இடம் நேராத வகையில் செயலாற்ற வேண்டும் என்பதே என் நோக்கம் என்று அடிக்கடி சொல்லி வருபவருமான ஈ. வே. ரா. இச்சிலை உடைப்பு இயக்கம் எளிதாக மக்களை வெறிச் செயலில் இறங்கும்படி செய்துவிடும் என்பதை உணராதது வியப்பாகவே இருக்கிறது.

ஈ. வே. ராவின் சிலையை, படத்தை உடைக்கிறேன், எரிக்கிறேன் என்று யாராவது கிளம்பினால் என்ன ஆகும்? இதற்கு முடிவு உண்டா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். தீர்மானமாக நல்லது என்று தெரியும் கள்ஒழிப்பைக்கூடச் சட்டத்தை ஒட்டிக் கட்டாயப்படுத்தக் கூடாது, அதனால் கள்ளத்தனமும் உடன் வளரும்,மக்களே உணர்ந்து ஒழிக்கும்படி பிரசாரம் செய்ய வேண்டும் என்பது போலக் கருத்துத் தெரிவிக்கும் ஈ. வே. ரா. அதே முறையை இந்தமாதிரி திருவுருவ வழிபாட்டு வகையிலும் கையாளாமல் உடைக்க முன்வந்தது சிறுபிள்ளைத் தனமாகவே இருக்கிறது.

இந்த நோக்கில் சமயச் சார்பானவர்களின் கடமையையும் நினைப்பூட்டாமல் இருக்க முடியவில்லை.

ஆசிரியர் மறைமலையடிகளார் ஏறத்தாழ 30 ஆண்டு முன் எழுதிய சைவ சமயத்தின் நெருக்கடியான நிலை என்னும் நூலிலுள்ள கருத்துக்கள் இப்போது நினைவுக்கு வருகின்றன.

சமயச் சார்பானவர்களில் பெரும்பாலோர் இன்று அதன் புறக் கோலங்களை மட்டும் கொண்டு கொள்கைகளையும் அதற்கேற்ற செயல்களையும் அறவே புறக்கணித்து வருகிறார்கள்.

திருக்கோயில்கள் வெறும் சடங்கு மன்றங்களாகவே நடைபெறுகின்றன. ஏழை எளிய மக்கட்கு நன்மை செய்வதாகவோ கலைகளை வளர்ப்பனவாகவோ, தெய்வ உணர்ச்சியை அறிவுத் துறையிலும், அருள் துறையிலும் நின்று ஊட்டுவனவாகவோ இல்லை.

திருமடங்கள் கால நிலைக்கேற்றபடி சமய வளர்ச்சிக்குத் தொண்டு செவ்வனே செய்வதில்லை. சம்பிரதாயங்களையும் சாதிக் கட்டுப்பாடுகளையுமே பெரிதாக நினைத்து இயங்கிக் கொண்டிருக்கின்றன.

ஒரே கடவுளைப் பல வடிவில் வைத்து வணங்குவது ஏன்? அந்தந்த மூர்த்திகளின் உண்மைப் பொருள்கள் என்னென்ன? அவ்வவற்றிற்கும் தேர் திருவிழாக்களும் ஏன் செய்ய வேண்டும்? வாழ்க்கைக்கு இவ்வகை வழிபாடுகளும், விழாக்களும் எவ்வாறு பயன் செய்யும்? என்பன போன்ற உண்மைகள் தெரிவதே இல்லை. செல்வாக்குடையார் ஏதோ வழக்கம்போல் அதிகார முறையில் (அன்பு முறையில்– அருள் உணர்வோடு அல்ல) முன்னின்று நடத்த அங்கங்கே வழிபாடுகளும் விழாக்களும் நடந்து வருகின்றனவே ஒழிய, அவைகளின் பொருளைப் பயனைப் பொதுமக்களுக்கு விளக்கிச்சிறப்பிப்பார்யாருமில்லை. இதனால் இவை

நஞ்சன்கூடு பல்பொடி
பாக்டெரியாரின்

யுனைடெட் கன்ஸர்ன்,
54; பந்தர்த் தெரு,:: சென்னை 1.

களெல்லாம் ஏன்? வீண் தானே? என்று கேட்பாருக்கும் குறை கூறுவார்க்கும் விடை சொல்ல மாட்டாத மக்கள் சிறிது சிறிதாகத் தம் நம்பிக்கையை இழந்து தெய்வவுணர்வையே கை விட்டு விடுகின்றனர்.

தெய்வவுணர்வு நீங்கி விட்டால் மக்களுக்குள் ஒழுக்கமும் உண்மை யன்பும் நிலைப்பதற்கு ஏது என்ன இருக்கிறது?

"எனவே ஈ. வே. ரா. சிலையை உடைக்கப் புறப்பட்டு விட்டாரே!" என்று ஆத்திரப்படுவதை விட அச்சிலையால் நாம் பெறும் நன்மை என்ன என்பதை அறிவுக்குப் பொருத்தமான முறையில் எடுத்துக் காட்டவும், அங்கங்கே உள்ள அருள் நெறி அன்பர்களே அவ்வுண்மைகளை நன்குணர்ந்து கொள்ளவும் வழி செய்ய வேண்டும். அப்போது இத்தகைய இயக்கங்கள் எல்லாம் இருக்கிற இடம் தெரியாமல் மறைய வழி ஏற்படும். எனவே இனியேனும் திருமடங்களும் திருக்கோயில்களும் அத் துறையில் நின்று பொது மக்களோடு தொடர்பு கொண்டு அவர்களுடைய பொது நன்மைக்கான ஏற்பாடுகளைச் செய்வதிலும், விளக்கத்துக்குத் துணை செய்வதிலும் அருள் உணர்வை நன்கு பெறுமாறு செய்வதிலும் முனைந்து வேலை செய்ய வேண்டும்.

ஈ. வே. ரா. வும் இவ்வியக்கம் பின்னால் விளைக்கக் கூடிய கொடுமைகளை எண்ணி இதனைக் கைவிடவும், சமயக் காப்பாளரும், தம் கடமைகளைச் செவ்வனே செய்ய முற்படவும் வேண்டும்.

—ந. ரா. ஆடலரசு.

—:○●○:—

அருள் துறை

* வார வழிபாடு *

சென்னைச் சிவனடியார் திருக்கூட்ட மண்டபத்தில் ஒவ்வொரு திங்கட்கிழமையும் மாலை 6-30 முதல் 8-30 வரை வழிபடு கூட்டமவை நடைபெறுகின்றது. அப்போது நம் ஆசிரியர் அவர்கள் வாக்கிலிருந்து அருள் வாக்குகள் அக நலங்களை வளர்க்கத்தக்கனவும், அகக் கண்ணைத் திறப்பித்து அருள் வாழ்க்கையில் ஈடுபடுத்துவனவுமான அமிழ்தினும் ஆற்ற இனிதுடை ஆழ்ந்த கருத்துக்கள் மலர்ந்து பொழியப்படுகின்றன. இதை எல்லோரும் உணர்ந்து உய்யுமாறு உதவ வேண்டி ஒவ்வொரு வாரமும் நம் முல்லைக் கொடியில் மலர வைத்தல் நன்றெனத் தோன்றுகிறது.

11-5-53ல் 'வார வழிபாடு' என்பதின் பொருள் இதுவரையிலும் யாரும் ரசிக்கறிதற்கும் அருமையான புதுவகையில் ஆசிரியாவர்கள் விளக்கம் செய்தார். அதன் சுருக்கம் கீழ் வருமாறு:—

"வார வழிபாடு என்றால் எழு நாட்களுக்கொருநாள் இறைவனைக் கூடிப் பிரார்த்தித்தல் என்பது பொதுப் பொருள். வாரம் என்றால் அன்பு, அதனால் அன்பு வழிபாடு. வாரம் ஒழுகுதல் எனும் சொற்பொருளுடையது. அதனால் அன்பு கனிந்து கரைந்து நீராளமாகி ஒழுகவேண்டும்; அப்போது தான் வாரம் எனும் பொருள் பொருந்தும். கட்டியாய் கல்மாதிரியிருந்தால் ஒழுகாது; கரைந்தால்தான் ஒழுகும்.

கண்ணீர் வருத்தத்தாலும் அன்பினாலும் ஒழுகும். உலகம் துன்பமானது; அதனால் அழுது தீர்க்கிறார்கள் அன்புகொண்டு தீர்ப்பதில்லை. துன்பங்களை, தொல்லைகளை அன்பு கொண்டு தீர்க்கவேண்டும். அன்பினால் மனம் கரைந்து அதனால் உடம்பிலுள்ள செந்நீர் கண் வழியாகப் பிரிந்து வருதல் கண்ணீர்! இரத்தத்திலிருந்து பிரிந்து வரும் பல நீர் உண்டு-மூக்கில் சளியாகவும், காதில் குறும்பியாகவும், மயிர்க்கால்கள்தோறும் வியர்வையாகவும், வாயில் எச்சிலாகவும், பிரிந்து வருகின்றன. ஆனால் இவைகளில் மனம் கலந்து பக்குவப் பட்டு வருவதில்லை. மனம் பதப்பட்டுப் பிரிவதுதான் அன்பின் நீர்; பதப்படாதது அழுகை நீர். தெரியாதவர்கள்தாம் அழுவர். தெரிந்தவர்கள் எல்லாம் இறைவன் செயலெனத் தெளிந்திருப்பர். மற்றவர் அழுவதில் அறியாமை இருக்கிறது. சான்றோர்கள் ஒருவருக்காக விரும்பி அழுதல் அன்பின் கரைதலான

அழுகை, துக்கத்தாலன்று. "அழுது அடி அடைந்த அடியார்" மாணிக்கவாசகர். "யானே பொய்.........அழுதால் உன்னைப் பெறலாமே" என்கிறார். எத்தனையோ வழிகளில் கடவுளை அடையலாம். சிலர் பூசை செய்தும், சிலர் உடம்பை வதக்கித் தவம் யோகம் தியானம் முதலிய செய்தும், சிலர் மந்திர உபதேசம் பெற்றும், ஞானக் கல்வி கேள்விகள் ஞான யோகம் புரிந்தும் அடைவர். அழுதும் அடையலாம் எனக் காட்டினார் மணிவாசகப் பெருந்தகையார். இதுவும் சுலபமான மார்க்கமாகத் தோன்றும். அவர் வருத்தத்தால் அழவில்லை. அன்பினால் கரைந்து அழுதார். மனம் கனிந்து பதப்பட்டு அழுதார். தன்னலங் கருதாது பிறர்க்கென அழுதார்.

சாதாரணமாக அழுகை சுயநலம் அறியாமையால் வருவது. சான்றோர்களுக்குத் துக்கமும் மகிழ்ச்சியும் ஒன்றே. மகிழ்ச்சியால் களிப்புக் கண்ணீர், மற்றவர்களுக்கு நலமுண்டாக மனம் அன்பால் மகிழ்ந்து வரும் நீர். தாய்மையான அன்பின் நீர். அப்படித் தாய்மையாய் அழுது அடி அடைந்தவர் மாணிக்கவாசகர்.

திருப்பெருந் துறையில் அருள் பெற்ற பின்னர் ஆண்டவனையும் அடியார்களையும் பிரிவாற்றாமையால், ஆண்டவனுடன் எப்போதும் பிரியாதிருக்க எண்ணியும், இறைவன் விளக்கம் அறிந்தும் அழுதனோமுமுண்டு. தனக்கருள வேண்டி, எண்ணியும் பார்க்கமுடியாத அவ்வளவு பெரு நிலையிலுள்ள பெருமான், தேவர்களுமறியொணா தேவ தேவன் மானிட உருத் தாங்கி இம் மண் மீது தம் திருவடிபடக் குருந்தமர நீழலில் எழுந்தருளிய மாபெருங் கருணையை நினைந்து நினைந்து அன்புக் கண்ணீராறாய்ப் பெருக ஆற்றாமையால் அழுதார். பிரிந்துவிட்டாரே என அழுதார். மதுரையில் பாண்டியன் தன்னை வீணே தாக்குதலால் துன்புறுத்திய காலத்து அவன் அறியாமைக்காகவும் அவன் மேன்மேல் வினை பெருக்கிக் கொள்கிறானே என இரங்கியும் அழுதார்.

திருப் பெருந்துறையில் ஆண்டவனிடம் பெற்ற ஞானத்தைத் தானே அனுபவித்துப் போவதா, எங்கே வைத்தால் உலகினர் நல்லவர்கள் எல்லாம் பெறுவர், உலகிலுள்ள எல்லா உயிர்களும் தாம் பெற்ற இன்பம் பெற வேண்டுமென்று தன்னலமற்ற கருணையால், பிறர் அனுபவிக்க வேண்டுமென்று அருளால் திருக் கழுக்குன்றில் மலங்கி கலங்கி அருட் கண்ணீர் சொரிந்தார். "மலங்கினேன் கண்ணில் நீரை மாற்றி மலங் கெடுத்த.... காட்டினாய் கழுக்குன்றிலே" திருப்பெருந் துறையிலேயே மலங்கழுவப் பெற்றாரென்றாலும் திருக்கழுக்குன்றில் மற்றவருக்காகக் கண்ணிலே நீர் விடப் பூரணமாக மலங்கெட்டுவிட்டது; அடியோடு போய்விட்டது. கழுக்குன்றில் கரை ஏறியது மாதிரியானார். தாம் பெற்ற ஞானச்செல்வத்தைப் பிறர்க்காக அங்கு வைத்தார். அதனால் திருக்கழுக்குன்றம் உலகுக்கே ஞானபீடம். ஞானத்தைப் பிறர்க்கென வைத்தார் மணிவாசகர். அது அப்படிப்பட்ட உயர்ந்த க்ஷேத்திரம். அவ்வளவு தூரம் உண்மை அடிப்படையுடையது என எல்லா உயர் க்ஷேத்திரங்களிலும் அறைந்து பேசுவேன்.

உலகினர் அழியும் செல்வத்தைச் சேர்த்துத் தம் பின் சந்ததிகளுக்கு வளம் தரும் பொருட்டு வைக்கின்றனர். இறைவன் ஞானத்தை உலகினருக்கு உதவும் பொருட்டு நல்லவர் வாயிலாக அருளுகிறார். சான்றோர் பெற்ற ஞானம் அவர்களுக்கு மட்டுமல்ல, இன்னொருவருக்குக் கொடுக்கத்தான். இது இயற்கையான ஒழுக்க நடை. உலகத்தோடு ஒட்டி ஒழுகல். உயர்ந்த நாகரிக உலகினர் தமக்குக் கிடைத்ததைப் பிறருக்கு வழங்குவர். ஒப்புரவு இன்னொருவருக்கு நாம் செய்யும் உபசாரம்; கல்வி, கல்லாமை எதிலும் அதுவே முடிபொருள், முடிவான கருத்து, தமக்குக் கிடைத்ததை மற்றவருக்கு வழங்குதல் என்பதே.

PHONE 55034 TEL. ENKAYAM
கைத்தறி ஆடைகளில் சிறந்தது எங்கள் கிசான் டிரேட்மார்க்

பட்டாடைகளுக்கும் நூலாடைகளுக்கும் சிறந்த இடம்
கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
ருஅ கிடங்குதெரு சென்னை

மனைவி மக்களுடன் இல்லறம் செய்யும் நோக்கம் விருந்தோம்பல், நல்ல சந்ததி பெற்று மற்றோருக்கு உலகுக்கு உதவவே. படிப்பது எதற்கு? இன்னொருவருக்குச் சொல்லிக்கொடுக்கவே. செல்வம் பெறுவதும் உலகுக்கு உதவும்பொருட்டே. அதனால் ஞானமும் பிறர்க்கு வழங்கவே. அதனால் மணிவாசகரும் தாம் பெற்ற ஞானத்தைப் பிறர்க்கு வழங்க மகிழ்ச்சியால் மலங்கிக் கலங்கிக் கண்ணீர் விட்டார். "இலங்குகின்ற சேவடிகள் இரண்டும் வைப்பிட மின்றியே அறியாது கலங்கி" இறைவன் தெரிசனம் திருக்கழுக்குன்றில் பெற்று அங்கு வைத்துவிட்டார். அப்படி ஞானத்தை வைக்கச் சொல்லிய காட்சி வடிவமில்லாக் காட்சி. அது என்ன நிலை? அது நிராகாரமான ஞானம். வடிவமில்லாதது, நிஷ்களமானது, நிராலம்பனமானது, நிதிசயமானது, திருப்பெருந்துறையில் கண்ட காட்சி ஆகார (வடிவ) மானது.

சாதாரண நிலையில் பாவித்துப்போய் வடிவமற்ற தியானத்துக்கு வரவேண்டும். இதே கருத்துடன் கோவில்களில் முதலில் வடிவம், பின் இலிங்கம், ஆகாச வெட்ட வெளி வைக்கப்பட்டிருக்கின்றன. இப்படி 3-வித பாவனைகளும் கோயில்களில் உண்டு. உருவம், அருஉருவம், அருவமென. உருவம் உற்சவமூர்த்தி, பிள்ளையார், முருகன், தட்சணாமூர்த்தி முதலியன. இலிங்கம் அருஉருவம். நடராஜரிடம் போக, வெட்ட வெளி ஞாபகம் வரவேண்டும். கண்ணாடிதான் ஆகாசம், அருவம். கோயிலில் உருவ உபாசனைக்குப் பின் உருவமில்லா வியாபகமான பாவலான நிலைதான் பெருத்த ஞான நிலை. இதைக் காட்டவே வடிவமற்ற காட்சிக்குப் பின் மணிவாசகரும் பெரிய ஞான நிலை பெற்றார். பிறர் நலத்துக்காக வைக்கப் பெற்ற காட்சி மற்றவரும் பெறத் தூய்மையான அன்பினால் கலங்கினார் மலங்கினார். இதுவே வாரம். அன்பு அதிகமாய் பெருகி வரவரக் கண்ணீர் அதிகமாய் வரும். உள்ளமும் உடம்பும், என்பும் தோலும் நீராய்க் கரைந்து அடையாளமாக வெளிப்படும். உள்ளே குமுறிக்கொண்டிருந்து மனப் பக்குவப்பட்ட நிலையில் கரைந்து கண்ணீர் ஆறாய் ஒழுகும். இந்தக் கண்ணீரால்தான அன்பின் நிலை தெரியும்.

இப்படி மனம் கரைந்து பதப்பட்டுப் பக்குவப்பட்டு நிற்கும் சான்றோரின் நிலை, அவர்கள் காட்டும் கடைக்கண் பார்வை, செயல்கள், செல்வத்தைச் செலவிடும் வகை, இன்சொல், உடன்படுதல், அடக்கம், ஒடுக்கம், ஆழ்ந்த கருத்துக்களின் போக்கு, ஈடுபாடு, பற்றற்று விடுதலையடைந்த நிலை, தம்மை இறைவனுக்கு ஒப்படைத்துச் சரணாகதியுற்றிருத்தல், பிறர்க்கென வாழ்தல், உலகத் தொண்டு, சேவை புரிதல் முதலியவற்றால் மனம் கனிந்ததற்கு அடையாளமாகப் புறத்தே விளங்கும். உழைப்பாலும், நல்லதில் ஒப்படைக்கும் மனத்துணிவாலும், கடமை செய்வதில் ஈடுபாட்டாலும் தெரியும்.

ஆண்டவனுக்கு என்று செய்ய, மனம், பதப்படுகிறது. உழைப்பும் தெரியாது. இதுவே பக்குவப்படுத்தும். அன்பின் வாரம், இறைப்பண்பு ததும்பி நிற்கும் நோக்கில் அங்கே நிலைத்திருக்கும் ஆண்டவனுக்குப் படையல் போட்ட மாதிரி. மற்ற உலக விவகாரங்களை மறந்து, முக்கியம் என நினைத்து இங்கு நாம் வரும்போது இறைவன் இங்கு விளங்குகிறார்.

சான்றோர் முன்னிலையில் பயபக்தியுடனிருக்க வேண்டும். அவர்கள் முன்னிலையில் தியானம் செய்ய உயர்ந்த பண்பு உயர்நிலை உண்டாம். வீண் பேச்சு வீண் விவகாரங்களால் நாம் நம் வாழ்க்கையையும் மற்றவர் வாழ்க்கையையும் வீணாக்குகிறோம், நம் பாவனை உயரவேண்டும். வாரம் என்றால் உண்மையின் ஒழுதகல்; ஈடுபாடு. இங்கு வந்து நுழையும்போதே சந்நிதானம் போன்றிருக்க வேண்டும். உணர்ச்சி உருக்கம் விம்மித் தெரியும்படியான படங்கள் முதலிய சூழல்களுடனிருக்க வேண்டும். எல்லாருக்கும் ஈடுபாட்டால் வரும் இன்பம் கட்டாயம். "உள்ளுருகு நலந்தானிலாத சிறியேற்கு" நல்குவர். நல்லதைப் பார்க்கும் போதெல்லாம் கசிய வேண்டும், உருக வேண்டும். படித்திருப்பவர்கள், வளமாயிருப்பவர்கள், அழகாயிருப்பவை முதலியவை கண்டு உதவி செய்து மகிழ்தலே வாரம். அதனால் வார வழிபாடு உள்ளுருகும் அன்புக்கும் நல்லதிற்கும் மகிழும்; நல்லதில் ஈடுபடும் மகிழ்ச்சி பெற்று வழிபடுதலாம். இந்த ஒழுக்கம் கைவந்தால் மலம் கழியும், பாசம் போகும்; இதுவே அழுது அருளடையும் மார்க்கம்.

அப்படி அன்புக்கு நல்லவைகளுக்கு மகிழ்தல் எனும் நற்பண்பு, அன்றாட வாழ்க்கையில் சிற்றுயிர் ஆருயிர் எல்லோரிடத்திலும் உள்ளுருகும் நிலை, வந்துவிட்டால் இறைவன் எவ்வளவு

அருமையானவனையும் எளியனாய் இந்த மண்ணுலகுக்கே வந்து விடுவான். அவ்வளவு எளிமையாய் வரக் காரணம் உள்ளுருகும் நிலைதான். உள்ளுருக்கம், அன்பினால் வரும் கனிவு, குழைவு; வார ஒழுகுதல் அப்படிப்பட்ட ஈடுபாடானவார வழிபாடு நடைபெற்றால் ஆண்டவன் உடனே வெளிப்படையாவான்.

நம் பிறவியை அப்படி அன்பின் வழி நினைப்பு சொல் செயல் ஈடுபடுத்தலான நிலையால் ஆண்டவன் திருவடியைப் பெற முடிகிறது. இதுவே தொண்டு. உலகையே தொண்டுக் களமாகக் கொண்டு உண்மையான ஈடுபாடு, அக நல ஒழுக்கம், புற நலங்கள் உயர்ந்தால் நல்லது. ஆண்களும் பெண்களும் சேர்ந்து உயர்ந்த நோக்கில் ஈடுபடுதலுக்கு எவ்வளவோ புண்ணியம் வேண்டும். அடிப்படைத் தெளிவு நன்றாய் வரும். வார வழிபாட்டால் தொண்டு செய்வதற்கு அதற்கேற்ற அக நலங்களை ஆண்டவன் அருள் புரிவான்.

இதற்குக் 'குருகுலத் தொண்டர் படை' ஒரு சாதனம். மனம் வாக்கு காயங்களைத் தொண்டுக்கென ஒப்படைத்து உழைக்க வேண்டும் குருகுலப் பணி வாழ்க்கையில் ஒரு நற்பணியாக மேற்கொண்டு அதே நோக்கத்துடன் செய்ய வேண்டும். நல்ல கட்டுக்கோப்புடன் உண்மை ஒழுக்கம் உள்ளுருக்கம் பெற்று அக நலங்களைப் பெறுவோம். "இருமை வகை தெரிந்து ஈண்டு அறம் பூண்டார் பெருமை பிறங்கிற்று உலகு" என விளங்க, வார வழிபாடு சிறக்கட்டும்.

—மோகனரங்கன்.

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

களில் மிகவும் ஈடுபட்டு வந்தவர்கள். அவர்கள் மறைவு தமிழினத்துக்கு ஈடு செய்ய முடியாத ஒரு பேரிழப்பாகும். கம்பராமாயணத்தை எரிக்க வேண்டும் என்று தொடங்கிய இயக்கத்தை இறுதி நேரத்தில் தந்தி அனுப்பி நிறுத்திய ஆர். கே. எஸ். அவர்கள் இருந்தால் ஈ. வே. ராவின் சிலை உடைப்பு இயக்கத்தினையும், எப்படியேனும் நிறுத்துவார்கள் என்று நம்பலாம். என்செய்வது?

தமிழ்த் தலைவர்கள் அப் பெருந்தகையாளரின் அடிச்சுவட்டைப் பின்பற்றித் தமிழ் மொழியையும் நாட்டையும் உயர்த்த முன் வருவார்களாக.

தமிழிசைச் சங்கத்தார் அவர்கள் தொடங்கிய பண் ஆராய்ச்சித் தொண்டைத் தொடர்ந்து நடத்தித் தமிழ் இசையையும் வளர்த்து உயர்வார்களாக.

வெல்க சண்முகனார்
தொண்டு!
விளங்குக அன்னார்
திருப்பெயர்!!

—தமிழ்ச் சிறுவன்.

—:○●○:—

Telegrams: "RAMBROS"

N. Ramu Bros;

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD,

COIMBATORE.

குருகுல் - - - வெளியீடுகள்

1. ஒளி வழிபாடு
   விலை அணா 6.
2. திருமூலர் அருள்மொழிகள்
   விலை அணா 4.
3. தணிகைமலை அல்லது அமைதி
   விலை அணா 6.
4. திருக்கழுக்குன்றப் பதிகம்
   விலை அணா 2.
5. கருக் கலை
   விலை அணா 4.
6. மூன்று உண்மைகள்
   விலை அணா 3.
7. இராமலிங்க அடிகள் வரலாறும் திருவருட்பா ஆராய்ச்சியும்
   விலை அணா 9.
8. முல்லைப்பாட்டு அகராதி
   விலை அணா 8.
9. தொல்காப்பியம் அகத்திணையியல் விளக்கம்
   விலை ரூ. 1.
10. ஆத்திசூடி - கருத்துரை
    விலை 0-0-3.

கிடைக்கும் இடம்:

குருகுலம், மாம்பாக்கம்;
மதுராந்தகம், P. O. (S. R)

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்; தி. சு. பாலசுந்தரம்; குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம். (அஞ்.)